

திருவள்ளூர் மாவட்டம் வில்லிவாக்கம் ஒன்றியம் கொள்ளுமேடு அரசினர் உயர்நிலைப் பள்ளி வளாகத்தில் தமிழ்நாடு அரசு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் துறை சார்பாக ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் பள்ளியின் உட்கட்டமைப்புகள் பசுமை சூழலோடு தரம் உயர்த்தப்பட்ட பசுமைப் பள்ளியினை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்து பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் மு. பிரதாப், மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் மாதவரம் எஸ். சுதர்சனம் உள்பட அரசு அதிகாரிகள் ஆசிரியர்கள் பள்ளி மாணவ மாணவிகள் கழக நிர்வாகிகள் முன்னாள் இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளனர்



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்றம் தொகுதி கருங்குழி பேரூர் திமுக சார்பில் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழாவையொட்டி பேரூர் செயலாளர் சுந்தரமூர்த்தி ஏற்பாட்டில் ஆயிரம் பேருக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது இதில் காஞ்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்எல்ஏ கலந்துகொண்டு பொதுமக்களுக்கு அறுசுவை உணவை வழங்கினார்.

### ஈரோடு மாவட்டம் – பெருந்துறை – விஜயமங்கலத்தில் – ஜூன் 11 அன்று

# வேளாண் கண்காட்சி - கருத்தரங்கம் 2025 விழா; முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அழைப்பு!

சென்னை, ஜூன் 5-

ஈரோடு மாவட்டம், பெருந்துறை அருகில் விஜயமங்கலத்தில் 11.06.2025 மற்றும் 12.06.2025 ஆகிய இரு தினங்களில் நடைபெறவுள்ள "வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் 2025" விழாவினை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஜூன் 11, 2025 அன்று தொடங்கிவைக்கும் விழாவில் உழவர்கள் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்றுப் பயன்பெற வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அழைப்பு விடுத்துள்ளார்.



இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாட்டின் வரலாற்றில் முதன்முதலாக வேளாண்மைக்கென தனி நிதி நிலை அறிக்கை தயாரித்து, கடந்த நான்கு ஆண்டுகளில் உழவர்கள் நலன் காக்க பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டன. 2025-26ஆம் ஆண்டிலும் புதிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

வேளாண்மை மற்றும் சார்புத் தொழில்களில் நவீன தொழில்நுட்பங்கள், கண்டுபிடிப்புகள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள், உயர் விளைச்சல் தரவல்ல புதிய பயிர் இரகங்கள், அறுவடை பின்சார் மேலாண்மை நுட்பங்கள், மதிப்புக்கூட்டும் நுட்பங்கள், வேளாண்மையில் மின்னணு தொழில்நுட்பங்கள், சந்தைப்படுத்தும் நுட்பங்கள், உயிர்ம மற்றும் இயற்கை வேளாண்மை, பாரம்பரிய இரகங்களைப் பரவலாக்குதல், உணவு பதப்படுத்துதல், கால்நடை மற்றும் மீன் வளர்ப்பு நுட்பங்கள், பயிர்க்கடன், பயிர்க்காப்பீடு உள்ளிட்ட சேவைகள், ஏற்றுமதி தொடர்பான விழிப்புணர்வு போன்ற பல்வேறு வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த தற்போதைய அனைத்து விவரங்களையும் வாய்ப்புகளையும் உழவர்கள், மாணவர்கள், பொதுமக்கள், உணவு பதப்படுத்தும் அமைப்புகள், ஏற்றுமதியாளர்கள் இயற்கை நல ஆர்வலர்கள்ளிடையே ஏற்படுத்திடும் வகையில் இந்த ஆண்டு "வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கங்கள் 2025" நடத்தப்பட உள்ளன.

**சிறப்பம்சங்கள்!**

இந்த ஆண்டின் முதல் "வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம்" ஈரோட்டில் நடைபெறுதல், வளர்ந்து வரும் வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் தொழில்நுட்பங்கள், புதிய இரக வேளாண்மை மற்றும் தோட்டக்கலைப் பயிர் விதைகள், ஒட்டு இரக பழ மரக்கன்றுகள், தென்னை கன்றுகள் மற்றும் பிற வகை மரக்கன்றுகள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் விற்பனை, உயர் இரக கால்நடைகள் மற்றும் வளர்ப்பு முறைகள், மீன் வளர்ப்பு, வேளாண்மையில் வங்கி சேவைகள் மற்றும் இவை குறித்த கருத்தரங்கம் உள்ளிட்ட பல்வேறு சிறப்பம்சங்களைக் கொண்டு, 11.06.2025 மற்றும் 12.06.2025 ஆகிய இரு தினங்களில் ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டாரம் விஜயமங்கலம் சுங்கச்சாவடி அருகில் "வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கு-2025" விழாவினை மிகச்சிறப்பாக நடத்த தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பு ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

இக்கண்காட்சி மற்றும் கருத்தரங்கினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 11.06.2025 அன்று தொடங்கி வைத்து, உழவர்களுக்கு திட்டப்பலன்களை வழங்கி சிறப்புரை ஆற்ற உள்ளார்கள்.

**பங்கேற்கும் துறைகள் மற்றும் நிறுவனங்கள்!**

வேளாண்மைத்துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை, வேளாண் பொறியியல் துறை, சர்க்கரைத் துறை, விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறை, கால்நடை பராமரிப்புத்துறை, மீன்வளத்துறை, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் (ஆவின்), தமிழ்நாடு உணவு பதப்படுத்தல் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம், பட்டு வளர்ச்சித் துறை, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், ஒன்றிய அரசின் வேளாண் ஆராய்ச்சி நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம், தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம் போன்ற பல்வேறு நிறுவனங்கள் இக்கண்காட்சியில் பங்கேற்கின்றன.

இவை தவிர, நுண்ணீர்ப் பாசன நிறுவனங்கள், உர நிறுவனங்கள், பூச்சிக் கொல்லி மருந்து நிறுவனங்கள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் தயாரிப்பு நிறுவனங்கள், விதை நிறுவனங்கள், வங்கிகள், பயிர்க்காப்பீட்டு நிறுவனங்கள், சர்க்கரை ஆலைகள் உள்ளிட்ட பல்வேறு தனியார் நிறுவனங்களும் கலந்து கொண்டு வேளாண் உற்பத்திக்குத் தேவையான புதிய இரகங்களின் விதைகள், காய்கறி விதைகள், மா, கொய்யா உள்ளிட்ட பழ வகைகளில் ஒட்டு இரகக் கன்றுகள், தென்னையில் வீரிய ஒட்டுக் கன்றுகள், நுண்ணூட்ட உரக்கலவைகள், உயிர் உரங்கள், இயற்கை உரங்கள் போன்ற இடுபொருட்கள் மற்றும் நவீன உபகரணங்களைக் காட்சிப்படுத்தவும் விற்பனை செய்யவும் உள்ளார்கள்.

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், பாரம்பரிய உணவு உற்பத்தி நிறுவனங்கள், ஏற்றுமதி நிறுவனங்கள் உணவு பதப்படுத்தும் அமைப்புகள், போன்ற நிறுவனங்களும் தங்களது தயாரிப்புகளைக் காட்சிப் படுத்தவும், விற்பனை செய்யவும் இசைந்துள்ளார்கள்.

**கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகள்!**

உழவர்கள் சார்ந்த அரசின் அனைத்துத் திட்டங்களையும் ஒரே இடத்தில் தெரிந்து கொள்ள வாய்ப்பாக இக்கண்காட்சி அமையும்.

நுண்ணீர்ப் பாசனத்திட்டம், இயற்கை வேளாண்மை, தமிழ்நாடு சிறுதானிய இயக்கம், தென்னையில் பயிர்ப்பாதுகாப்பு, பாரம்பரிய நெல் இரகங்கள், ஒருங்கிணைந்த பண்ணையம், பசுமைக்குடில், செங்குத்துத் தோட்டம், நீரியல் தோட்டம், மாடித் தோட்டம், வேளாண் இயந்திரமயமாக்குதல், மதிப்புக்கூட்டுதல், முதலமைச்சரின் உழவர்நல சேவை மையங்கள், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், மலைவாழ் உழவர் முன்னேற்றத் திட்டம், ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம், உயர் இரக கால்நடை வளர்ப்பு, கோழிவளர்ப்பு, மீன்வளர்ப்பு போன்ற உழவர்களுக்காக அரசு செயல்படுத்தும் பல்வேறு திட்டங்களைத் தெரிந்து கொள்ளும் வகையில் சிறப்புக் கண்காட்சி அரங்குகள் அமைக்கப்படும். மேலும், உழவர் செயலி பதிவிறக்கம், அரசு நல உதவித்திட்டங்களில் பயன் பெற பதிவு செய்தல், தமிழ் மண்வள இணைய தளம் மூலம் மண்வள அட்டை விநியோகம் போன்ற இணையவழி சேவைகளைப் பற்றி அறிந்து கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கொள்முதல் செய்பவர் விற்பனையாளர் சந்திப்பும் (BuyersSellers Meet) நடைபெற உள்ளது.

உயிர்ம வேளாண்மை தொழில்நுட்பம் மற்றும் இடுபொருள் உற்பத்தி, மகத்துவ மஞ்சள் சாகுபடி முறைகள், வளம்தரும் வாழை சாகுபடி, தென்னை பராமரிப்பு மற்றும் பூச்சி நோய் மேலாண்மை முறைகள், நவீன கரும்பு சாகுபடி மேலாண்மை, உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் செயல்பாடுகள் மற்றும் வழிகாட்டுதல், வேளாண் வணிகம் மற்றும் ஏற்றுமதிக்கான வாய்ப்புகள், மாற்றம் தரும் தோட்டக்கலை சாகுபடி, பயிர்த் தொழில்களுக்கு ஏற்ற பக்கத்தொழில்கள் (Secondary Agriculture), உழவர்களின் வருமானத்தை உயர்த்திட மதிப்பு கூட்டுதல் மற்றும் சந்தைப்படுத்துதல், வேளாண் இயந்திரமயமாக்கலில் உள்ள சவால்களும், தீர்வுகளும் போன்ற தலைப்புகளில் கருத்தரங்குகள் நடத்தப்படும். இக்கருத்தரங்குகளில் தொழில்நுட்ப வல்லுநர்களும், அனுபவமிக்க வேளாண் பெருமக்களும், ஏற்றுமதியாளர்களும், உயர் அலுவலர்களும் கலந்து கொண்டு பல்வேறு பயனுள்ள தகவல்களைப் பகிர்ந்து கொள்ளவிருக்கிறார்கள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்டத்தில் வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் சிறப்பாக நடைபெறத் தேவையான முன்னேற்பாடுகள் குறித்து வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் ஆய்வு செய்து அலுவலர்களுக்கு தக்க அறிவுரை வழங்கினார்.

மேலும், வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கில் பெருவாரியான வேளாண் பெருமக்கள் கலந்து கொண்டு பயன் பெற வேண்டும் என்பதற்காக, மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் உழவர்களை அழைத்து வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும். இவ்விழாவில், அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்களும் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்ற உள்ளனர் என்றும், இவ்வாறு தமிழ்நாடு அரசால் மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற உள்ள இவ்வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கில் உழவர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும் என்றும் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் உழவர் பெருமக்களையும் பொதுமக்களையும் கேட்டுக் கொண்டார்.



முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 102 வது பிறந்தநாள் விழா இன்று காலை தமிழரசு அச்சக வளாகத்தில் தமிழரசு அச்சகத்தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் சார்பில் கலைஞரின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து, இனிப்புகள் வழங்கப்பட்டது



செம்மொழி நாயகர் கலைஞரின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்கு பகுதி 30 அ வட்ட கழகத்தின் சார்பில் கழக கொடி ஏற்றிய திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து கலைஞரின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி வட்ட செயலாளர் டி.சுந்தரம் தலைமையில் கழகத்தினர் இனிப்பு வழங்கி கொண்டாடினார்கள். உடன் இராமன் கே. நரேந்திரன், ஏ.வி.முருகன், எஸ் சி எம் ராஜு, சக்கரபாணி, பிஎஸ்என்எல் குமார், டிவிஎஸ் கோபி, காஞ்சி சண்முகம், கா வெற்றிவேல், எம் சீனிவாசன், உமா, மகேஸ்வரி, கல்யாணி, அபிப்ரஹ்மான், டி சுரேஷ், பி சந்தோஷ், தீபக், பி விக்னேஷ், வெங்கட்ராமன், கருணாநிதி, பா கௌசல்யா, மற்றும் பலர் பங்கேற்றனர்.

### இன்று பிறந்த நாள்: திருவல்லிக்கேணி பெரிய பள்ளிவாசல் வளாகத்தில்

# கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் துயிலிடத்தில் அஞ்சலி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் மலர் போர்வை அணிவித்து மரியாதை!

**சென்னை, ஜூன் 5 -**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் அவர்கள் பிறந்த ஜூன் 5ஆம் நாள் அன்று அவரது துயிலிடத்தில் மலர் போர்வை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (5.6.2025) காலை 10.00 மணியளவில் கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை, திருவல்லிக்கேணி, வாலாஜா பெரிய பள்ளிவாசல் வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது துயிலிடத்தில் மலர்ப் போர்வை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்.**

கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் அவர்கள் 5.6.1896 அன்று திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பேட்டையில் பிறந்தார். இவரது இயற்பெயர் முகம்மது இஸ்மாயில். காயிதே மில்லத் அவர்களின் சமுதாயப் பணி அவர் அரசியல் பணிக்கு வருவதற்கு காரணமாக இருந்தது. அரசியல் வாழ்க்கையில் தம் கண்ணியத்தையும், நேர்மையையும், கடமையையும் கட்டிக் காத்துத் தேசப் பணியையும், மார்க்கப் பணியையும் தொடர்ந்தார்.

அண்ணல் காந்தியடிகளின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு 1920ஆம் ஆண்டு முதல் 16 ஆண்டு காலம் காங்கிரசின் பெருந்தலைவர்களுள் ஒருவராகத் திகழ்ந்து நாட்டின் விடுதலைக்காகப் போராடினார்.

1936ஆம் ஆண்டு சென்னை முஸ்லீம் லீக் கட்சியின் தலைவர், சட்டமன்ற உறுப்பினர், எதிர்க் கட்சித் தலைவர், மத்திய அரசியல் நிர்ணய சபையின் உறுப்பினர், மாநிலங்களவை உறுப்பினர் உள்ளிட்ட பல்வேறு உயர்ந்த பொறுப்புகளை ஏற்று மக்கள் பணி ஆற்றியுள்ளார்.

மூதறிஞர் இராஜாஜி, பெருந்தலைவர் காமராசர், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் உற்ற நண்பராக விளங்கிய கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள் 5.4.1972 அன்று இயற்கை எய்தினார்.

காயிதே மில்லத் அவர்கள் அரசியல் நிர்ணய சபை உறுப்பினராக இருந்தபோது, இந்தியாவின் பொது மொழியாக – ஆட்சி மொழியாக இந்தி தான் இருக்க வேண்டும் எனும் கருத்து எழுந்தது. அப்போது, அதனைக் கடுமையாக எதிர்த்தார் காயிதே மில்லத் அவர்கள். இந்தி கூடாது என்றால்,

இந்தியாவின் ஆட்சி மொழியாக எந்த மொழியை ஏற்பது என்று அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்கள் கேட்டனர். அப்போது, வளம் செறிந்ததும் தொன்மை நிறைந்ததுமான எனதருமைத் தாய்மொழி தமிழ் மொழியையே ஆட்சி மொழியாக்கலாம் என்று ஆணித்தரமாக முழங்கித் தம் தமிழ்ப் பற்றை ஆழமாகப் பதிவு செய்தவர் காயிதே மில்லத் அவர்கள்.

கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் அவர்களின் புகழுக்குப் பெருமை சேர்க்கின்ற வகையில், ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசின் சார்பில் அன்னாரது பிறந்த நாள் அரசு விழாவாகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

5.6.2025 அன்று நடைபெறும் கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் அவர்களின் 130வது பிறந்த நாள் விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாண்புமிகு மேயர், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

### கழக துணை பொதுச் செயலாளர் ஆ. இராசா எம்.பி. பங்கேற்கிறார்

# திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி - பூவிருந்தவல்லி தொகுதிகளின் நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!



## மாவட்டச் செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிவிப்பு!

**திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட ஆவடி பூவிருந்தவல்லி ஆகிய சட்டமன்ற தொகுதிகளின் நிர்வாகிகளுடன் கலந்துரையாடல் கூட்டம் கீழ்கண்ட அட்டவணைப்படி நடைபெறும் :**

**நாள் : 05.06.2023**

| தொகுதி | நேரம் | இடம் |
|---|---|---|
| ஆவடி | காலை 11.00 மணி | NA கிராண்ட் ஹால் திருவேற்காடு |
| பூவிருந்தவல்லி | பகல் 12 .00 மணி | ஸ்ரீ பாலாஜி பவன் ஓட்டல் trunk ரோடு காட்டுப்பாக்கம் பூவிருந்தவல்லி |

மேற்கண்ட கலந்துரையாடல் கூட்டத்திற்கு திருவள்ளூர் மத்திய மாவட்டதிற்குட்பட்ட , சட்டமன்ற உறுப்பினர் , மாவட்ட நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள். தலைமை செயற்குழு / பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் செயலாளர்கள் அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், அவரவர் உள்ளடங்கிய சட்டமன்ற தொகுதியின் கலந்துரையாடல் கூட்டத்திற்கு (மேலே குறிப்பிட்டுள்ள நிர்வாகிகள் மட்டும்) தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்: 2026 சட்டமன்ற தேர்தல் குறித்து**

**அமைச்சர் ஆவடி சா.மு.நாசர்**
செயலாளர், திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் சாலவாக்கம் ஒன்றிய கழகச் செயலாளர் தி.குமாரின் தாயார் திருமதி. ஆதிலட்சுமி அம்மாள் அவர்களின் படத் திறப்பு நிகழச்சியில் மாவட்டக் கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., அன்னாரது படத்தினை திறந்து வைத்து மலரஞ்சலி செலுத்தினார். மேலும் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம் உத்திரமேரூர் ஒன்றிய கழகச் செயலாளர் கெ.ஞானசேகரன், என்.எஸ்.பாரிவள்ளல், என்.எஸ். ரவி, மாவட்ட, ஒன்றிய, பேரூர், உள்ளாட்சி பிரதிநிதிகள் ஊராட்சி மன்ற தலைவர்கள்,கிளை கழக நிர்வாகிகள் மலரஞ்சலி செலுத்தினர்.



உதகை நகர திமுக சார்பில் உதகை நகர கழக செயலாளர் எஸ்.ஜார்ஜ் தலைமையில் முத்தமிழ் அறிஞர், கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு முள்ளிக்கரை அன்பு அறிவு அறக்கட்டளை ஆதரவற்றோர் இல்லத்தில் உள்ளவர்களுக்கு ஒரு மாதத்திற்கான உணவு பொருட்களை மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம். ராஜு வழங்கினார். இதில் கே.போஜன், ஜே.ரவிக்குமார், ஆர். இளங்கோவன், வாணீஸ்வரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கிருஷ்ணன், ரீட்டா மேரி, ஜெயகோபி, அனில் குமார்உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.